இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 15 – சனிக்கிழமை 01 நவம்பர் 2025 – திருச்சி ★★ 16 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 81 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 15 - Saturday 01 November 2025 - Trichy ★★ 16+8 Pages ₹5.00

## பசும்பொன்னில் ரூ.3 கோடியில்

# தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம்!

## நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், திருமதி. பி. கீதாஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், இராம.கருமாணிக்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கமுதி, நவ.01-**

**“பசும்பொன்னில் ரூ.3 கோடியில் தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பசும்பொன்னில் தேவர் திருமகனார் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு, செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது முதல்வர் அவர்கள் கூறியதாவது:-

### ‘பாண்டிய மன்னர்களின் இளவல்’ தேவருக்கு அண்ணா புகழாரம்!

நம்முடைய நாட்டின் விடுதலைக்காக தன்னையே ஒப்படைத்துக் கொண்டு உழைத்திருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் நினைவிடத்தில் இன்றைக்கு எங்களுடைய மரியாதையைச் செலுத்தியிருக்கிறோம்!

பசும்பொன் திருமகனாரின் புகழைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையோடு எடுத்துச்சொன்னதை நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

“அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், பசும்பொன் திருமகனாரை மனதாரப் பாராட்டி இருக்கிறார்!

1963-ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் அவர்கள் நிறைவெய்திய போது, பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்று கழகத்தில் இருந்த மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர்களும், இந்தப் பசும்பொன்னுக்கு வந்து அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள்.

### தேவர் நினைவிடத்தை மணிமண்டபமாக உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர்!

இன்றைக்கு ஏராளமான அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் வந்து, பசும்பொன் திருமகனாரின் நினைவைப் போற்றும் இந்த நினைவிடத்தை, 1969ல் பார்வையிட்டு, 1974ல் மணிமண்டபமாக உருவாக்கிக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

